

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 51 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 14 – செவ்வாய்க்கிழமை 30 செப்டம்பர் 2025 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 51: Thiruvalluvar Year - 2056 - Purataasi 14 - Tuesday 30 September 2025 - Madurai 10 Pages ₹ 5.00


## சோகமும், துயரமும் சூழ்ந்திருக்கும் இந்நிலையில்

# கரூர் சம்பவம் பற்றி அவதூறு பரப்பாதீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, செப். 30 -**

**“சோகமும், துயரமும் சூழ்ந்திருக்கும் இந்நிலையில் கரூர் சம்பவம் பற்றி அவதூறு பரப்ப வேண்டாம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.9.2025) கரூர் சம்பவம் தொடர்பாக மக்களுக்கு வேண்டுகோள் விடுத்து ஆற்றிய காணொலி உரை வருமாறு:-

கரூரில் நடந்தது பெருந்துயரம்; கொடுந்துயரம்!

இதுவரை நடக்காத துயரம்; இனி, நடக்கக்கூடாத துயரம்.

மருத்துவமனைக்கு நான் நேரில் சென்று பார்த்த காட்சிகள் இன்னும் என் கண்ணை விட்டு அகலவில்லை. கனத்த மனநிலையிலேயும் துயரத்திலேயும் தான் இன்னும் இருக்கிறேன்.

செய்தி கிடைத்ததும் மாவட்ட நிர்வாகத்தை முடுக்கிவிட்டு, எல்லா உத்தரவுகளையும் பிறப்பித்த பின்னாலும், என்னால் வீட்டில் இருக்க முடியவில்லை; உடனே அன்றைக்கு இரவே கரூருக்குப் போனேன்.





குழந்தைகள், பெண்கள் என்று 41 உயிர்களை நாம் இழந்திருக்கிறோம். இறந்தவர்களது குடும்பத்திற்கு, தலா பத்து லட்சம் ரூபாய் அறிவித்து, அதை உடனடியாக வழங்கி கொண்டு இருக்கிறோம். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு, அரசு சார்பில் முழு சிகிச்சையை வழங்கி வருகிறோம்.

நடந்த சம்பவத்துக்கான முழுமையான உண்மையான காரணத்தை ஆராய, முன்னாள் நீதியரசர் அருணா ஜெகதீசன் அவர்கள் தலைமையில், ஒரு நபர் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது.

**சமூக வலைதளங்களில் பொய்ச் செய்திகள்!**

ஆணையத்தின் அறிக்கை அடிப்படையில், அரசின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் இருக்கும் என்று உறுதியளிக்கிறேன். இதற்கிடையே, சோஷியல் மீடியாவில் சிலர் பரப்புகின்ற வதந்திகளையும், பொய் செய்திகளையும் பார்த்து கொண்டுதான் இருக்கிறேன்.

எந்தவொரு அரசியல் கட்சித் தலைவரும் தன்னுடைய தொண்டர்களும் அப்பாவி பொதுமக்களும் இறப்பதை எப்போதும் விரும்ப மாட்டார்கள்.

இந்த சம்பவத்தில், உயிரிழந்தவர்கள் எந்த கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், என்னை பொறுத்தவரைக்கும், அவர்கள் நம்முடைய தமிழ் உறவுகள்!

**விஷமத்தனமான செய்திகளை தவிர்த்திடுவீர்!**

எனவே சோகமும், துயரமும் சூழ்ந்திருக்கும் இந்த நிலையில், பொறுப்பற்ற முறையில் விஷமத்தனமான செய்திகளை தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடத்தும்போது, இனிவரும் காலங்களில், எத்தகைய பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும் என்ற விதிமுறைகளை வகுக்க வேண்டியது, நம் எல்லோருடைய கடமை!

**விதிகள் - நெறிமுறைகள் வகுக்கப்படும்!**

எனவே, நீதியரசரின் ஆணைய அறிக்கை கிடைத்த பிறகு, எல்லா அரசியல் கட்சிகள், பொது அமைப்புகளோடு ஆலோசனை நடத்தி - இதற்கான விதிகள், நெறிமுறைகள் வகுக்கப்படும் என்று உறுதியளிக்கிறேன். அத்தகைய நெறிமுறைகளுக்கு எல்லோரும் ஒத்துழைப்பு தருவார்கள் என்று நம்புகிறேன்.

மனித உயிர்களே, எல்லாவற்றிற்கும் மேலானது! மானுடப் பற்றே அனைவர்க்கும் வேண்டியது!

அரசியல் நிலைப்பாடுகள், கொள்கை முரண்பாடுகள், தனிமனிதப் பகைகள் என்று எல்லாவற்றையும் விலக்கி வைத்துவிட்டு, எல்லோரும், மக்களுடைய நலனுக்காக சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு எப்போதுமே நாட்டிற்கு பலவகைகளிலே முன்னோடியாக தான் இருந்திருக்கிறது.

இதுபோன்ற நிகழ்வுகள் இனி எந்த காலத்திலேயும் நடக்காமல் தடுக்க வேண்டியது நம் எல்லோருடைய கடமை!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## கரூரில் 41 பேர் பலி: பலமுறை எச்சரித்தும்

# காவல்துறை அறிவுரையை த.வெ.க. நிர்வாகிகள் கேட்கவில்லை!

## முதல் தகவல் அறிக்கையில் தகவல்!

**கரூர், செப். 30 -**

**நாமக்கல்லில் வேண்டுமென்றே தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் வருகை காலதாமதம் செய்யப்பட்டதாக போலீஸ் எப்.ஐ.ஆரில் தகவல் தெரிவித்துள்ளது. கரூரில் த.வெ.க. தலைவர் விஜயின் பரப்புரை கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தது நாட்டையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.**

இந்நிலையில், நாமக்கல் டவுன் காவல் நிலைய முதல் தகவல் அறிக்கையில் அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளது. அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

- பலமுறை எச்சரித்தும், அறிவுரை வழங்கியும் த.வெ.க. நிர்வாகிகள், காவல்துறை சொன்னதை கேட்கவில்லை.
- உயிர்ச்சேதம் ஏற்படும் என த.வெ.க. பொதுச்செயலர் புஸ்ஸி ஆனந்த், மாவட்ட செயலாளர் சதீஷை எச்சரித்தோம்
- நாமக்கல்லில் வேண்டுமென்றே விஜய் வருகை தாமதம் செய்யப்பட்டது. அதனாலேயே கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கூட்டம் அலை மோதியது.
- காலதாமதம் காரணமாகவே கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கூட்டம் அலை மோதியது.
- பல இடங்களில் நிபந்தனைகள் மீறப்பட்டதை த.வெ.க. நிர்வாகிகள் கண்டு கொள்ளவில்லை.
- மெயின் ரோடு வழியாக காலதாமதமாக வந்து போக்குவரத்து பாதிப்பு ஏற்படுத்தி நிபந்தனையை மீறினர்.
- அசாதாரண சூழல் ஏற்பட்டு கூட்ட நெரிசலால் மூச்சுத் திணறல், கொடுங்காயம், உயிர்ச்சேதம் ஏற்படும் என எச்சரித்தோம்.
- நாமக்கல்லில் காத்திருந்த பலருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள்.
- மக்கள் கூட்டத்தை அதிகப்படுத்தி அரசியல் பலத்தை காட்டும் நோக்குடன் விஜய் வருகையை 4 மணி நேரம் தாமதம் செய்தனர்.
- மருத்துவமனை பெயர் பலகையில் ஏறி தொண்டர்கள் சரிந்து மக்கள் மீது விழுந்ததால் அசாதாரண சூழல் நிலவியது.
- பல மணி நேரம் காத்திருந்ததால் தொண்டர்கள், மக்கள் வெயில் மற்றும் தாகத்தால் சோர்வடைந்தனர்.
- போதிய தண்ணீர், மருத்துவ வசதியின்றி, அதிக கூட்டத்தால் ஏற்பட்ட அழுத்தம் மக்கள் சோர்வடைந்தனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

## கரூர் உயிரிழப்புகள் குறித்து

# ஒரு நபர் ஆணையம் 2வது நாளாக விசாரணை!

*கரூர், செப். 30 -*

*கரூர் உயிரிழப்புகள் குறித்து நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம் 2வது நாளாக விசாரணையை தொடங்கி உள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரையும் நீதிபதி அருணா ஜெகதீசன் சந்தித்து விவரங்களை கேட்டறிந்தார்.*

*கரூரில் நிகழ்ந்த துயர சம்பவத்தில் இதுவரை 41 பேர் உயிரிழந்துள்ளனர். 50க்கும் மேற்பட்டோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பாக அமைக்கப்பட்ட ஒரு நபர் விசாரணை ஆணையத்தின் தலைவரான ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தனது ஆய்வை நேற்று முன்தினம் தொடங்கினார். கரூர் வேலுசாமிபுரத்துக்கு வந்த அவர், காவல்துறை அதிகாரிகளிடம் விவரங்களை கேட்டறிந்தார். நீதிபதி அருணா ஜெகதீசன் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கும் அதிகாரிகள் பதில் அளித்தனர். சம்பவத்தை நேரில் பார்த்தவர்களிடமும் அவர் விசாரணை மேற்கொண்டார்.*

*பின்னர், கரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவோரிடமும் விசாரணை ஆணையக் குழுவினர் விசாரணை நடத்தினர். இந்நிலையில், நீதிபதி அருணா ஜெகதீசன் குழுவினர் சம்பவம் நடந்த வேலுச்சாமிபுரம் பகுதி உள்ளிட்ட இடங்களில் நேற்று மீண்டும் ஆய்வு நடத்தினார். பின்னர் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரையும் நீதிபதி அருணா ஜெகதீசன் சந்தித்து விவரங்களை கேட்டறிந்தார்.*

*இந்த ஆய்வை அடுத்து, சம்பவ இடத்தில் வைக்கப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்களில் பதிவான காட்சிகளை அவர் ஆய்வு செய்ய உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.*

---

## கரூர் துயர சம்பவம்:

# புதிய விசாரணை அதிகாரி நியமனம்!

*கரூர், செப். 30 -*

*கரூர் துயர சம்பவம் தொடர்பான வழக்கில் புதிய விசாரணை அதிகாரியாக கூடுதல் எஸ்.பி. பிரேமானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.*

*கரூரில் நடிகர் விஜய் மேற்கொண்ட பிரச்சாரத்தின் போது கூட்ட நெரிசல் ஏற்பட்டது. அன்றைய தினம் ஒன்பது குழந்தைகள் உள்பட 39 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். பின்னர் நேற்று முன்தினம் ஒருவரும், நேற்று காலை ஒருவரும் உயிரிழந்ததததால் பலி எண்ணிக்கை 41 ஆக அதிகரித்தது. கூட்ட நெரிசலில் சிக்கி காயமடைந்த 60க்கும் மேற்பட்டவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.*

*இச்சம்பவம் குறித்து காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வழக்கின் விசாரணை அதிகாரியாக டி.எஸ்.பி. செல்வராஜ் நியமிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில், இந்த வழக்கின் புதிய விசாரணை அதிகாரியாக கூடுதல் எஸ்.பி. பிரேமானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.*

---

# மஹாராஷ்டிராவில் கனமழை: ரெட் அலெர்ட் விடுத்தது வானிலை மையம்!

மும்பை, செப். 30 –

மஹாராஷ்டிராவில் கொட்டி தீர்த்த கனமழை காரணமாக, 10 பேர் உயிரிழந்தனர். மும்பை, தானே, நாசிக் உள்ளிட்ட இடங்களுக்கு வானிலை மையம் ரெட் அலெர்ட் விடுத்துள்ளது. மஹாராஷ்டிராவில் மும்பை, தானே உள்ளிட்ட இடங்களில் கடந்த சில நாட்களாக விட்டுவிட்டு மழை பெய்து வருகிறது.

மும்பையில் கடந்த இரண்டு நாட்களாக கனமழை கொட்டி தீர்த்து வருகிறது. கொலாபாவில் 12 செ.மீ., மழையும், சாண்டாக்ரூசில் 9 செ.மீ., மழையும் பதிவானது. சில இடங்களில், 5 மணி நேரத்தில், 5 செ.மீ., மழை பெய்தது. இதனால், நகரின் முக்கிய சாலைகள் வெள்ளக்காடாகின. உடனடியாக மும்பை மாநகராட்சி ஊழியர்கள் தேங்கிய நீரை அகற்றினர்.

ஹிண்ட்மாதா, காந்தி மார்க்கெட், சுனாபட்டி, மலாட், தஹிசர் மற்றும் மன்குர்ட் சுரங்கப்பாதைகளில் தேங்கிய தண்ணீரும் பம்பு செட்கள் வைத்து அகற்றப்பட்டன. மும்பை, தானே, பால்கர், ராய்காட் உள்ளிட்ட இடங்களில் அடுத்த 48 மணி நேரத்திற்கு அதி கனமழை பெய்ய வாய்ப்புள்ளதால் இந்திய வானிலை ஆய்வு மையம் ரெட் அலெர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் பெய்த கனமழை காரணமாக 10 பேர் உயிரிழந்தனர். மழையால் பாதிக்கப்பட்ட இடத்தில் இருந்து 11,800க்கு மேற்பட்டோர் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். ஆற்றின் கரையோர உள்ள கோவில்கள் வெள்ளத்தில் மூழ்கின. வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடியாக மீட்பு பணி மேற்கொள்ள வேண்டும் என மஹாராஷ்டிரா முதல்வர் பட்னவிஸ் அதிகாரிகளுக்கு உத்தர விட்டுள்ளார்.